# <u>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுத்தும் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கான சிறுவர் பாதுக்கப்புத் தொடர்பாக மாணவத் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டம்</u>

பாடசாலை சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக அறிவு, திறன், மனப்பாங்கினை மேம்படுத்தும் நோக்கமாகக் கொண்டு விஷேடமாக உருவாக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டமாக மாணவத் தூதுவர் தேசிய நிகழ்ச்சித்திட்டம் **சிறுவர் நட்பு மற்றும் பாதுகாப்பான சூழலை** பாடசாலையினுள் உருவாக்குவதற்காக மாணவத் தலைவர்களின் தலைமையில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக தேசிய கொள்கை தொடர்பாக மாணவத் தலைவர்களுக்கு அறிவூட்டுதல், பாடசாலையினுள் சிறுவர் துஷ்பிரயோகம் நடப்பதை குறைப்பதற்கும் தடுப்பதற்கும் மாணவத் தலைவர்களின் பங்களிப்பினைப் பெறுதல், சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக முடிவெடுக்கும் செயல்பாட்டில் மாணவத் தலைவர்களைப் பங்குபற்ற வைத்தல், பாடசாலையினுள் சிறுவர் நட்பு மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு மாணவத் தலைவர்களின் தலைமைத்துவ அறிவு, திறன், மனப்பாங்கை மேம்படுத்துவதற்கான தலையீடு மற்றும் சிறுவர் பாதுகாப்பின் பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறும் மாணவத் தலைவர் சமூகத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் பிரதான இலக்காகும்.

இந்த இலக்கை அடைவதைற்கு பாடசாலையினுள் செயற்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

## <u>பாடசாலையினுள் செயற்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

1. **தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தொடர்பான தொடர்பாடல் தகவல்களை காட்சிப்படுத்தல்.** மாணவத் தூதுவர் பாடசாலையாக பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் கல்வி அமைச்சினால் மாணவத் தூதுவர் பாடசாலைகளாக சான்றுப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட சான்றிதழ் அதிபரின் அறையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
    - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் விலாசம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
    - 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை தொடர்பான தகவல்களை காட்சிப்படுத்தல்.
    - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட / பிரதேச அதிகாரிகளின் தகவல்களை காட்சிப்படுத்தல் (பெயர், பதவி, தொலைபேசி இலக்கம்)

    மேற்கூறிய தகவல்கள் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எளிதாகப் பார்க்கக் கூடிய இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும். அதிபர் அறை, மாணவத் தலைவர் குழு அறை, நூலக சூழல், ஆலோசனை அறை, பிரதான அறிவிப்புப் பலகை/ அறிவிப்பு பலகைகளில் கண்டிப்பாக காட்சிப்படுத்தப்பட வேண்டும். அதே போன்று இந்த தகவல்கள் வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

**2. மாணவத் தூதுவர் "பதிவுக் குறிப்பு" புத்தகத்தை பராமரித்தல்**

எல்லாப் பாடசாலைகளிலும் ''மாணவத் தூதுவர் பதிவுக் குறிப்பு புத்தகம்'' பிரதான மாணவத் தலைவன் / மாணவத் தலைவியினால் பராமரிக்கப்பட வேண்டும். எல்லாப் பதிவுக் குறிப்புப் புத்தகத்தின் இறுதியிலும் மாணவத் தலைவர் குழு பொறுப்பாசிரியர் / பொறுப்பாசிரியை மற்றும் பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் திகதியிடப்பட வேண்டும்.

மாணவத் தூதுவர் பாடசாலைகளை பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் இந்த பதிவுக் குறிப்பு கட்டாயமாக கவனத்தில் கொள்ளப்படும். கல்வி அமைச்சினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அதிகாரிகள் (அமைச்சு, மாகாணம், வலயம், கோட்டம்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் (பிரதேச, மாவட்ட, பிரதான அலுவலகம்) மற்றும் உங்கள் பாடசாலைக்கு இணைக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவத் தூதுவர்களுக்கு பதிவுக் குறிப்புகளைப் பயன்படுத்தலாம். மேலும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக தொடர்பு கொள்ளப்படும் வளவாளர்கள், அனுசரணையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பதிவுக் குறிப்பில் குறிப்பிலிட வாய்ப்பளிக்க முடியும்.

**3. மாணவத் தலைவர்களுக்காக செயற்படும் "பாடசாலை மாணவத் தலைவர் நிகழ்ச்சித்திட்டம்"**

இந்த நிகழ்ச்சித்திட்டம் பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தகின்ற மாணவத் தூதுவர் 5 பேரின் தலைமையில் மற்றும் தரம் 9 தொடக்கம் தரம் 13 வரை எல்லா மாணவத் தலைவர்களின் பங்களிப்புடன் நடைபெற வேண்டும். மாணவத் தலைவர் குழு பொறுப்பாசிரியர் / பொறுப்பாசிரியை மற்றும் ஆலோசனை ஆசிரியர் / ஆசிரியை, பாடசாலை சிறுவர் பாதுகாப்புக்குழு பொறுப்பாசிரியர் / ஆசிரியை, தகவல் தொடர்பாடல் பாட பொறுப்பாசிரியர் / ஆசிரியை, ஊடகவிலயல் பாட பொறுப்பாசிரியர் / ஆசிரியை ஆகியோரின் ஆதரவையும் பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ள வேண்டும். தீர்மானமெடுத்தல் பாடசாலை அதிபரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் / பல்கலைக்கழக மாணவத் தூதுவர்கள் / வெளி வளவாளர்களை உள்ளடக்கி இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

இங்கு சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் பங்களிப்பு, சிறுவர் உரிமைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மாணவத் தலைவர்களின் பொறுப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பிற்கான பங்கு போன்றவை திட்ட உள்ளடக்கத்தில் சேர்க்கப்பட வேண்டும். பாடசாலையினுள் மாணவத் தூதுவர் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுதல் மற்றும் மாணவத் தலைவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக நடத்தை நெறிமுறைகளை உருவாக்கவும் வேண்டும்.

4. **மாணவத் தலைவர்களுக்கான "பாடசாலை சிறுவர் பாதுகாப்பு முகாம்"களை நடாத்துதல்.**

பாடசாலை அதிபரின் தலைமையில் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்த நிகழ்ச்சி ஒரு நாள் அல்லது பல நாள் நிகழ்ச்சியாக பள்ளி வளாகத்தில் வருடத்திற்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும்.

மாணவத் தலைவர் குழுவிற்குப் பொறுப்பான பொறுப்பாசிரியர் இத்திட்டத்தை செயல்படுத்த முனைப்பு காட்டுவதுடன், மாணவத் தூதுவர்கள், சிரேஷ்ட மாணவத் தலைவன் மற்றும் தலைவியின் பங்களிப்புடன் இந்த முகாம் நடத்தப்பட வேண்டும்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவத் தூதுவர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவத் தூதுவர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1. சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல்.
2. குழுக்களாக முன்வைத்தல், மாணவத் தலைவர்களினால் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தல்.
3. அந்தப் பிரச்சனைகளுக்கான தீர்வினை நடைமுறை ரீதியாக கலந்துரையாடி செயற்படுத்தல்.

செய்தித்தாள் அல்லது மின்னணு ஊடகங்கள் மூலமாக கடந்த 6 மாதங்களில் வெளியான சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து குழுக்களாக கலந்துரையாடுதல் அந்த சம்பவங்கள் தமது பாடசாலையிலுள்ள மாணவனுக்கோ மாணவிக்கோ நடந்திருந்தால் அல்லது நடந்தால் அதை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்து ஆக்கபூர்வமாகக் கலந்துரையாடி சிறுவர் பாதுகாப்பு முகாம்களை பயனள்ளதாக திறம்பட நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பாடசாலை மாணவத் தலைவர் குழு, பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அனுசரனையாளர்கள், நலன்விரும்பிகளின் போன்றவர்களின் ஒத்துழைப்பை பாடசாலை பெற்றுக் கொள்ள முடியும்.

5. **சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான மாணவர் மாநாடு / பயிற்சிப் பட்டறை / விழிப்புணர்வு நிகழ்ச்சி**

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமை மீறல்கள் குறித்த விழிப்புணர்வு அல்லது மாநாடு பாடசாலை அதிபரின் தலைமையின் கீழ் சிரேஷ்ட மாணவத் தலைவரின் பங்குபற்றலுடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். தேவையாயின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் / பல்கலைக்கழக மாணவத் தூதுவர்கள் / வெளி வளங்களை இந்நிகழ்ச்சித்திட்டல் இணைத்துக்கொண்டு செயற்படுத்த முடியும்.

- தரம் 1-5
- தரம் 6-8
- தரம் 9-11
- தரம் 12-13

**பாடசாலையொன்றுக்கு ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு தரத்திற்காவது நிகழ்ச்சித்திட்டம் செய்யப்பட வேண்டும்.**

6. **சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான ஆசிரியர் மாநாடு / பயிற்சிப் பட்டறை / விழிப்புணர்வு நிகழ்ச்சி**

   சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, அதனால் செயற்படுத்தப்படும் சேவைகள் என்ன , சிறுவர்களைப் பாதிக்கும் சட்டங்கள், சிறுவர்கள் எதிர்காலத்தில் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்கு போன்ற விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்ட வேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு வளப் பங்களிப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், மாவட்ட உளவியல் அதிகாரிகள் மற்றும் வெளி வளங்கள் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு வருடத்தில் ஒரு பாடசாலைக்கு குறைந்தது ஒரு வேலைத்திட்டமாவது செய்யப்பட வேண்டும். வருடத்தினுள் பாடசாலையில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் உள்ளடங்கும் வகையில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவை வழங்க வேண்டும்.

7. **“மாணவத் தூதுவர் சஞ்சிகை”க்காக ஆக்கங்களை வழங்குதல்.**

   தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வருடாந்தம் வெளியிடப்படும் மாணவத் தூதுவர் சஞ்சிகைக்காக ஆக்கங்களை சமர்ப்பிக்க மாணவத் தூதுவர் நிகழ்ச்சித்திட்டக்காக பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாடசாலைகளுக்கு இச்சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை அனுப்புவதற்கு மாணவத் தலைவன் / தலைவிகள், மாணவத் தூதுவர்கள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆக்கங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வருடாந்தம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். இது தொடர்பான தகவல்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் www.childprotection.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம்.

8. **பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்**

   2011 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க “சுரெகும் பவ்வ” சுற்றறிக்கையின் படி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் கல்வி அமைச்சினால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மாணவத் தூதுவர் நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் நிறுவப்படாவிடின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகளுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவும். இந்தக் குழு செயற்பாட்டு

மட்டத்தில் நடத்திச் செல்வதற்கு மற்றும் பாடசாலையில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பாடசாலை மாணவத் தூதுவர்களின் ஆதரவைப் பெற்று செயற்படவும்.

**9. சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான பெற்றோர் மாநாடு / பயிற்சிப் பட்டறை / விழிப்புணர்வு நிகழ்ச்சி**

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, அதனால் செயற்படுத்தப்படும் சேவைகள் என்ன , சிறுவர்களைப் பாதிக்கும் சட்டங்கள், சிறுவர்கள் எதிர்காலத்தில் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் பெற்றோரின் பங்கு, நேர்மறை கற்றலின் பெறுமதி போன்ற விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்ட வேண்டும். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு வளப் பங்களிப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், மாவட்ட உளவியல் அதிகாரிகள் மற்றும் வெளி வளங்கள் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு வருடத்தில் ஒரு பாடசாலைக்கு குறைந்தது ஒரு வேலைத்திட்டமாவது செய்யப்பட வேண்டும்.

**10. உளவள, ஆலோசனை பயிற்சிப்பட்டறை / மாநாடுகளை நடாத்துதல்.**

சம வயதுக் குழுக்களுடன் நல்ல சமூகத் தொடர்புகளுடன் பழகக் கூடிய ஆளுமை கொண்ட மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கு உளவியல் ஆதரவு மற்றும் ஆலோசனைகனை வழங்குவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

மாணவத் தூதுவர் 5 பேரினால் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் உளவியல் ஆலோசனைப் பட்டறைகள் மற்றும் மாநாடுகளைத் திட்டமிட்டு பாடசாலையில் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அதிபரின் அனுமதியுடன் மாணவத் தலைவர் குழு பொறுப்பாசிரியர் மற்றும் ஆலோசனை ஆசிரியரின் ஆலோசனையினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், மாவட்ட உளவியல் அதிகாரிகள் மற்றும் தேவையாயின் வெளி வளங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். இது 4 கட்டங்களில் செயற்பட வேண்டும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக மாணவத் தூதுவர்களின் ஆதரவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

1. முதற் கட்டம் - சிரேஷ்ட மாணவத் தலைவர் குழு உள்ளடங்கலாக தரம் 9 க்கு மேலுள்ள எல்லா மாணவத் தலைவர்களுக்கான ஆலோசனைப் பட்டறையை நடத்துதல்.
2. இரண்டாம் கட்டம் - வகுப்புத் தலைவர் தலைவிகளுக்கு ஆலோசனைப் பட்டறையை நடத்துதல்
3. மூன்றாம் கட்டம் - மாணவர் அனைவர்களுக்கும் பொருத்தமான வகையில் ஆலோசனைப் பட்டறையை நடத்துதல்
4. நான்காம் கட்டம் - பாடசாலை அதிபர்கள், நிர்வாகக் குழுக்களுக்கு உளவியல் ஆலோசனைப் பட்டறைகள் / மாநாடுகளை நடத்துதல்.

இதில் குழந்தைகளிடம் பொதுவாகக் காணப்படும் இனப்பிரச்சினைக்கான தூண்டுதல், வன்முறை, சகிப்புத் தன்மையின்மை போன்றவற்றிற்குப் பின்னால் உள்ள உளவியல் பிரச்சினைகளைக் கண்டறிந்து ஒழுக்கமான சிறுவர் தலைமுறையினை உருவாக்கத் தேவையான உளவியல் ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

11. **வருடாந்தம் "பாடசாலை சிறுவர் பாதுகாப்பு தினத்தை" நடந்துதல்.**
மாணவத் தூதுவர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவத் தலைவர் குழுக்களால் பாடசாலை பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து பாடசாலை சிறுவர் பாதுகாப்புத் தினத்தை திட்டமிட்டு (அதிபரின் எழுத்து மூல அனுமதியைப் பெற்று) மாணவத் தலைவர் குழு பொறுப்பாசிரியரின் பரிந்துரையில் செய்யப்பட வேண்டும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளை இணைத்து பாடசாலை சிறுவர் பாதுகாப்புத் தினம் நடத்தப்பட வேண்டும். இதற்கு பல்கலைக்கழக மாணவ தூதுவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். வருடத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இங்கு பாடசாலை என்ற வகையில் மாணவத் தூதுவர் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட சிறுவர் பாதுகாப்பு இழப்பிற்கு வழிவகுக்கும் ஆபத்தான காரணிகள், அந்த இடர் மற்றும் பிரச்சினைகள் பாடசாலை மாணவர்களை எவ்வாறு பாதித்துள்ளது, இது போன்ற சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள், பெற்றோர்களின் பொறுப்பு, கிடைக்கக் கூடிய அரச நிறுவனங்களின் அதிகாரிகளின் அதிகாரிகளின் ஈடுபாடு பற்றி தெரிவிக்கலாம். பல்வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளுடன் (மேடை நாடகங்கள், பாடல்கள், நடனங்கள், குறும்படங்கள், விவாதங்கள் போன்றவை) சிறுவர் பாதுகாப்புத் தினமானது ஆக்கபூர்வமான நடைபெற வேண்டும்.

12. **சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான ஆய்வறிக்கை**
சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி தலைப்பொன்றைத் தெரிவு செய்து சிரேஷ்ட மாணவத் தலைவர்களால் விவாதிக்கப்பட்டு மாணவத் தலைவர் குழு பொறுப்பாசிரியர் மற்றும் அதிபரினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். உதாரணம் : பாடசாலை மாணவத் தலைவர்களினால் தங்களது பாடசாலை மாணவர் மாணவர்களின் அடையாளம் காணப்பட்ட ஆபத்துக் காரணி தொடர்பாக மேற்கோள்ளக்கூடிய ஆராய்ச்சிகளை அடையாளம் காணுதல் / தனியுரிமைக்கு இடையூறு விளைவிக்காத வகையில் முன்வைக்கக் கூடிய அல்லது பாடசாலைப் பிரதேசத்தில் அல்லது பாடசாலையினுள் சிறுவர் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல் அல்லது அபாயங்கள் குறித்த ஆராய்ச்சிகளை முன்வைக்கலாம்.

பாடசாலை மட்டத்தில் இந்த ஆய்வு நடைபெற வேண்டும். தேவைப்படும் போது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். பல்கலைக்கழக மாணவ தூதுவர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுகின்ற பல்கலைக்கழக மாணவ தூதுவர்களடமிருந்தும் இது தொடர்பான மேலதிக ஒத்துழைப்பினைப் பெற முடியும்.

13. **மாணவத் தலைவர்கள் மற்றும் மாணவத் தலைவ பொறுப்பாசிரியர்களினால் 5 மொடியூல்கள் பூர்த்தி செய்யப்படல்.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கமைய இந்த 5 மொடியூல்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவனம் இணைந்து ஆலோசனை வழங்குகின்றது.

- மொடியூல் 01 - சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு
- மொடியூல் 02 - தலைமைத்துவம், முகாமைத்துவம் மற்றும் இலக்கை உருவாக்குதல்
- மொடியூல் 03 - தொடர்பாடல் மற்றும் மக்கள் தொடர்பு
- மொடியூல் 04 - வாழ்க்கைத் தேர்ச்சி அபிவிருத்தி
- மொடியூல் 05 - பாடசாலையினுள் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நடைமுறைக் குழுத் திட்டம்.

14. **"சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் இடர் பதிவேட்டை தயாரித்தல் (School Based Child Protection Risk Registry)"**

பாடசாலை மட்டத்தில் இடர் பதிவேட்டை தயாரிக்க அதிபர் உள்ளடங்களாக ஆசிரியர்களினால் 10 மாணவத் தலைவர்களைக் கொண்ட குழு பெயரிடப்பட வேண்டும். அந்தக் குழு இடர் பதிவேட்டை தயாரிக்க தேசிய சிறுவர் பாதகாப்பு அதிகார சபையின் அதிகாரிகளுடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கமைய பணியாற்ற வேண்டும்.

வகுப்பாசிரியர் / வகுப்பாசிரியையினால் ஒவ்வொரு வகுப்பிலும் கட்டாயக் கல்வி மற்றும் / சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான ஆபத்தில் உள்ள மாணவர்களின் ரகசியப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். அந்தப் பதிவேடு வகுப்பாசிரியர் / வகுப்பாசிரியையினால் அதிபரிக்கு வழங்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாணவத் தலைவர்கள் மற்றும் மாணவத் தலைவர் குழுவின் பொறுப்பாசிரியர் / ஆசிரியையினால் இறுதிப்பதிவு தயாரிக்கப்பட்டு வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட வேண்டும் மற்றும் இந்த முதன்மை ஆவணத்தை அதிபரின் பரிந்துரையில் பராமரிக்கப்பட வேண்டும்.

**உதாரணம் : பாடசாலையை இடைவிடல் மற்றும் கற்றல் குறைபாடு**

14.1 **பாடசாலை மட்டத்திலான சிறுவர் பாதுகாப்பு இடர் பதிவேடுகளை பராமரித்தல் மற்றும் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகள்.**

அதிபர் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகளுடன் இணைந்து விரைவாக தீர்வு காண செயற்பட வேண்டும்.

15. மாணவத் தூதுவர் வருடாந்த அறிக்கை

மாணவத் தூதுவர் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி ஆண்டறிக்கையை தயாரிக்கவும். (விஷேட சந்தர்ப்பங்களில் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தூதர்களாக பாடசாலை மாணவத் தலைவர்களின் பங்கு, திட்டத்தின் புகைப்படம், இத்திட்டத்தின் நோக்கங்கள், கொடுக்கப்பட்ட சவால்கள், பெற்றுக்கொண்ட அறிவு, திறன் மேம்பாடு, தலைமைத்துவப் பயிற்சி போன்றவை உட்பட)

அதிபர் மற்றும் மாணவத் தலைவர் குழுப் பொறுப்பாசிரியரின் அறிவுறுத்தலின் படி, மாணவத் தூதுவரினால் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வருடத்திலும் செப்டெம்பர் 30 ஆம் திகதி உங்கள் பாடசாலையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகளிடம் ஒரு பிரதியினை ஒப்படைக்க வேண்டும். (இது வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
National Child Protection Authority

ChildLine Sri Lanka
1929